ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2039/32 - 2017 ඔක්තෝබර් මස 06 වැනි සිකුරාදා - 2017.10.06

*2039/32 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 7/2001 (1)*

**1968 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபைச் சட்டம்**

*1968 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் வெளிநாட்டலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

திலக் மாரப்பன,
வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
2017, ஒற்றோபர் 04.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2017 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் சபை (சனநாயகக் கொரிய மக்கள் குடியரசு தொடர்பான தடைவிதிப்புகள்) பற்றிய ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. அணு, இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதங்களின் பரம்புதலும் அவை வெளிச்செலுத்தப்படும் வழிவகைகளும் சர்வதேசச் சமாதானத்துக்கும் பாதுகாப்புக்கும் அச்சுறுத்துதலாக அமைகின்றனவென்று அழுத்திக் கூறுகின்றவையும், (இதனகத்துப்பின்னர் "சகொமகு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சனநாயகக் கொரிய மக்கள் குடியரசு, சர்வதேசச் சமாதானத்துக்கும் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக அமைகின்ற அதன் அணு மற்றும் எறிகணை நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்புபட்ட எல்லாச் செயற்பாடுகளையும் இடைநிறுத்துதல் வேண்டுமென்றும் எல்லா அணு ஆயுதங்களையும் ஏலவேயுள்ள அணு நிகழ்ச்சித்திட்டத்தையும் கைவிடுதல் வேண்டுமென்றும் மீள உறுதிப்படுத்துகின்றவையுமான ஐக்கிய நாடுகள் சபைப் பாதுகாப்புப் பேரவைத் தீர்மானம் 1718 (2006), மற்றும் 1874 (2009), 2087 (2013), 2094 (2013), 2270 (2016) மற்றும் 2321 (2016) அத்துடன் 2371 (2017) என்பனவுட்பட்ட அடுத்துப்பின்னரான தீர்மானங்களினாலும் வேறெவையேனும் அடுத்துப்பின்னரான தீர்மானங்களினாலும் செய்யப்பட்ட அத்தீர்மானத்தின் திரிபுபடுத்துகைகளும் அதன் பலப்படுத்துகையும், சகொமகு தொடர்பாகத் தடைவிதிப்பு வழிமுறைகளைப் பிரயோகிப்பதற்குத் தொடர்ச்சியான கடப்பாடுகளை ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்புநாடுகளின்மீது விதிக்கின்றன. ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் பேரவையானது, ஐக்கிய நாடுகள் சபைப் பட்டயத்தின் VII ஆம் அத்தியாயத்தின்கீழ் செயலாற்றி, 2006 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 14 ஆந் தேதியன்று, தீர்மானம் 1718 (2006) என்பதை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

1A-PG 3718 - 507 (2017/10)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**பாகம் I**

தகுதிவாய்ந்த அதிகாரி

*3.* இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்துக்காகத் தகுதிவாய்ந்த அதிகாரியொருவர் இருத்தல் வேண்டும்; அவர், பாதுகாப்பு என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

**பாகம் II**

தடைசெய்யப்பட்ட செயற்பாடுகள்

*4. (1)* இலங்கையிலுள்ள ஆளொருவர் அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள இலங்கைப் பிரசையொருவர் -

(அ) இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை I இல் நிரற்படுத்தப்பட்ட ஏதேனும் இனமுட்பட, (இதனகத்துப்பின்னர் "பெயர்குறிக்கப்பட்ட இனம் அல்லது பெயர்குறிக்கப்பட்ட சொகுசு இனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஐக்கிய நாடுகள் சபைப் பாதுகாப்புப் பேரவையினால் அல்லது குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஏதேனும் இனத்தை அல்லது ஏதேனும் சொகுசு இனத்தை, அவ்வினம் இலங்கையில் தோற்றுவிக்கப்பட்டதாயிருப்பினுஞ்சரி அல்லதாயிருப்பினுஞ்சரி, சகொமகு இலுள்ள எவரேனுமாளுக்கு அல்லது சகொமகு இன் சார்பில் செயலாற்றுகின்ற எவரேனுமாளுக்கு, நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ, வழங்குதல், விற்பனை செய்தல் அல்லது கைமாற்றுதல் ஆகாது; அல்லது

(ஆ) இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை II இல் நிரற்படுத்தப்பட்ட ஏதேனும் இனமுட்பட, ஏதேனும் பெயர்குறிக்கப்பட்ட இனத்தை அல்லது பெயர்குறிக்கப்பட்ட சொகுசு இனத்தை, அத்தகைய இனம் சகொமகு இல் தோற்றுவிக்கப்பட்டதாயிருப்பினுஞ்சரி அல்லதாயிருப்பினுஞ்சரி, சகொமகு இலுள்ள எவரேனுமாளிடமிருந்து அல்லது சகொமகு இன் சார்பில் செயலாற்றுகின்ற எவரேனுமாளிடமிருந்து பெறுகைசெய்தல், களஞ்சியப்படுத்துதல் அல்லது கைமாற்றுதல் ஆகாது.

*(2)* தகுதிவாய்ந்த அதிகாரி, பின்வருவனவற்றை உடனடியாக வர்த்தமானியில் வெளியிடுதல் வேண்டும்:-

(அ) ஐக்கிய நாடுகள் சபைப் பாதுகாப்புப் பேரவைத் தீர்மானம் 2094 (2013) இன் பின்னிணைப்பு III மற்றும் IV, தீர்மானம் 2270 (2016) இன் பின்னிணைப்பு IV, மற்றும் தீர்மானம் 2321 (2016) இன் பின்னிணைப்பு III மற்றும் IV என்பவற்றில் குறித்துரைக்கப்பட்ட பெயர் குறிக்கப்பட்ட இனங்களினதும் பெயர்குறிக்கப்பட்ட சொகுசு இனங்களினதும் முதலாவது நிரல்கள்; அத்துடன்

(ஆ) அத்தகைய நிரல்களுக்கான அடுத்துப்பின்னரான எவையேனும் திருத்தங்கள் செய்யப்படுவதன்மேல் அத்தகைய திருத்தங்கள்.

*(3)* இரண்டாம் பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், தகுதிவாய்ந்த அதிகாரி, நிதிசார் உளவறிதற் கூறினூடாக, பெயர்குறிக்கப்பட்ட இனங்களும் பெயர்குறிக்கப்பட்ட சொகுசு இனங்களும் ஐக்கிய நாடுகள் சபைப் பாதுகாப்புப் பேரவையினால் அல்லது குழுவினால் பெயர்குறிக்கப்படுவதன்மேல், அத்தகைய பொருட்கள் பற்றி நிதிநிறுவனங்களுக்கு அறிவித்தல் வேண்டும்.

*5.* நான்காம் ஒழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின்கீழ் குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காகக் கலன் அல்லது வானூர்தியொன்று பயன்படுத்தப்படுவதனை, அல்லது சகொமகு இலிருந்து அல்லது அவர்களின் நாட்டினத்தவர்களினால் ஐக்கிய நாடுகள் சபைப் பாதுகாப்புப் பேரவைத் தீர்மானம் 2321 (2016) இன் 26 ஆம் பந்தியினால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளின்கீழ் நிலக்கரி, இரும்பு, இரும்புத்தாது, செம்பு, வெண்காந்திகை, வெள்ளி மற்றும் துத்தநாகம் அல்லது சிலைகள் பெறுகை செய்யப்படும் நோக்கங்களுக்காக அவை பயன்படுத்தப்படுவதனை ஆளொருவர் செய்வித்தலாகாது அல்லது அனுமதித்தலாகாது.

*6. (1)* இலங்கையிலுள்ள ஆளொருவர் அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள இலங்கைப் பிரசையொருவர், சகொமகு வுக்கு, அல்லது பெயர்குறிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கு அல்லது பெயர்குறிக்கப்பட்ட உருவகத்துக்கு, அல்லது ஒரு பெயர்குறிக்கப்பட்ட ஆளின் அல்லது பெயர்குறிக்கப்பட்ட உருவகத்தின் சார்பில் அல்லது அவரின் அல்லது அதன் பணிப்பின்கீழ் செயலாற்றுகின்ற தனியாளுக்கு அல்லது உருவகத்துக்கு, அத்தகைய பெயர்குறிக்கப்பட்ட ஆளுக்கு அல்லது பெயர்குறிக்கப்பட்ட உருவகத்துக்கு அல்லது அவரின் அல்லது அதன் நன்மைக்காக, -

(அ) ஒரு கலத்தை அல்லது வானூர்தியை வாடகைக்கு அமர்த்துதலாகாது அல்லது குத்தகைக்கு எடுத்தலாகாது;

(ஆ) கப்பற்றொகுதிச் சேவைகளை வழங்குதலாகாது; அல்லது

(இ) புதிய உலங்குவானூர்திகளை அல்லது கலன்களை விற்பனை செய்தலாகாது; அல்லது

(2) இலங்கையிலுள்ள ஆளொருவர் அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள இலங்கைப் பிரசையொருவர் -

(அ) சகொமகு இல் கலன்களைப் பதிவுசெய்வதற்கு அல்லது கலனொன்று சகொமகு கொடியைப் பயன்படுத்துவதற்கான அதிகாரவளிப்பைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பித்தலாகாது;

(ஆ) சகொமகு இனால் கொடியுரிமைகொண்ட ஏதேனும் கலத்தைச் சொந்தமாக வைத்திருத்தலாகாது, குத்தகைக்குக் கொடுத்தலாகாது அல்லது தொழிற்படுத்துதலாகாது;

(இ) கள்ளமான வழிவகைகளினூடாக உட்பட, சகொமகு இனால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட, கட்டுப்படுத்தப்பட்ட அல்லது தொழிற்படுத்தப்பட்ட ஏதேனும் கலத்துக்காக, ஏதேனும் கல வகுப்பாக்கத்தை, சான்றுப்படுத்துகையை அல்லது இணைந்த சேவையை வழங்குதலாகாது; அல்லது

(ஈ) கள்ளமான வழிவகைகளினூடாக உட்பட, சகொமகு இனால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட, கட்டுப்படுத்தப்பட்ட அல்லது தொழிற்படுத்தப்பட்ட கலன்களுக்குக் காப்புறுதி அல்லது மீள்காப்புறுதிச் சேவைகளை வழங்குதலாகாது.

(3) சகொமகு வுக்குச் சொந்தமான, அதனால் கட்டுப்படுத்தப்பட்ட அல்லது தொழிற்படுத்தப்பட்ட ஏதேனும் கலன் பதிவகற்றப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஏதேனும் பதிவகற்றப்பட்ட கலன் வேறொரு கொடியுரிமை நாட்டினால் பதிவுசெய்யப்படுதலுமாகாது.

7. இலங்கையிலுள்ள ஆளொருவர் அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள இலங்கைப் பிரசையொருவர் -

(அ) சனநாயகக் கொரிய மக்கள் குடியரசிலுள்ள எவரேனுமாளுக்கு அல்லது சகொமகு இன் எவரேனும் பிரசைக்கு, ஏதேனும் பெயர்குறிக்கப்பட்ட இனத்தை வழங்குதல், உற்பத்தி செய்தல், தயாரித்தல், உடைமையில் வைத்திருத்தல், கொள்ளுதல், பேணுதல், இருப்புத்தொகுத்தல், களஞ்சியப்படுத்துதல், அபிவிருத்தி செய்தல், இடம்பெயர்த்தல், கைமாற்றுதல் அல்லது பயன்படுத்துதல் தொடர்பாகச் சொத்துக்களை, நிதிசார் சேவைகளை, தொழில்நுட்பப் பயிற்சியை, மதியுரையை, சேவைகளை அல்லது உதவியை வழங்குதலோ அல்லது பெற்றுக்கொள்ளுதலோ ஆகாது; அல்லது

(ஆ) சகொமகு இலுள்ள எவரேனும் ஆளிடமிருந்து ஏதேனும் பெயர்குறிக்கப்பட்ட இனத்தை வழங்குதல், உற்பத்தி செய்தல், தயாரித்தல், உடைமையில் வைத்திருத்தல், கொள்ளுதல், பேணுதல், இருப்புத்தொகுத்தல், களஞ்சியப்படுத்துதல், அபிவிருத்தி செய்தல், இடம்பெயர்த்தல், கைமாற்றுதல் அல்லது பயன்படுத்துதல் தொடர்பாகத் தொழில்நுட்பப் பயிற்சியை, மதியுரையை, சேவைகளை அல்லது உதவியைப் பெற்றுக்கொள்ளுதலாகாது.

8. ஆளொருவர், ஒரு பெயர்குறிக்கப்பட்ட ஆளுக்கு அல்லது உருவகத்திற்கு, அல்லது அத்தகைய பெயர்குறிக்கப்பட்ட ஆளின் அல்லது உருவகத்தின் சார்பில் அல்லது பணிப்பின் பேரில் செயலாற்றுகின்ற வேறெவரேனும் ஆளுக்கு அல்லது உருவகத்திற்கு உரிய அல்லது முழுமையாக அல்லது கூட்டாக அவரினால் அல்லது அதனால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட அல்லது வைத்திருக்கப்பட்ட அல்லது கட்டுப்படுத்தப்பட்ட எவையேனும் நிதிகளை, வேறு நிதிசார் சொத்துக்களை அல்லது பொருளாதார வளன்களைக் கையாளுதலாகாது.

9. இலங்கையிலுள்ள ஆளொருவர் அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள இலங்கைப் பிரசையொருவர் -

(அ) எவரேனும் பெயர்குறிக்கப்பட்ட ஆளுக்கு அல்லது அவரின் நன்மைக்காக;

(ஆ) ஏதேனும் பெயர்குறிக்கப்பட்ட உருவகத்துக்கு அல்லது அதன் நன்மைக்காக; அல்லது

(இ) ஒரு பெயர்குறிக்கப்பட்ட ஆளின் அல்லது பெயர்குறிக்கப்பட்ட உருவகத்தின் சார்பில் அல்லது அவரின் அல்லது அதன் பணிப்பின்கீழ், அத்தகைய பெயர்குறிக்கப்பட்ட ஆளுக்கு அல்லது பெயர்குறிக்கப்பட்ட உருவகத்துக்கு அல்லது அவரின் அல்லது அதன் நன்மைக்காகச் செயலாற்றுகின்ற எவரேனும் ஆளுக்கு அல்லது உருவகத்துக்கு அல்லது அவரின் அல்லது அதன் நன்மைக்காக,

நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் எவையேனும் நிதிகளை, வேறு நிதிசார் சொத்துக்களை மற்றும் பொருளாதார வளன்களைக் கிடைக்கக்கூடியனவாக்குதலாகாது.

10. இலங்கையிலுள்ள ஆளொருவர், சகொமகு இன் அணு தொடர்பான, எறிகணை தொடர்பான, அல்லது பேரழிவை ஏற்படுத்தும் ஏனைய ஆயுதங்கள் தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அல்லது செயற்பாடுகளுக்கு அல்லது ஐக்கிய நாடுகள் சபைப் பாதுகாப்புப் பேரவைத் தீர்மானங்கள் 1874 (2009), 2087 (2013), 2094 (2013), 2270 (2016) மற்றும் 2321 (2016) என்பவற்றினால் தடைசெய்யப்பட்ட வேறு செயற்பாடுகளுக்கு அல்லது அத்தகைய தீர்மானங்களினால் விதிக்கப்பட்ட வழிமுறைகளைத் தட்டிக்கழிப்பதற்குப் பங்களிப்பதற்கு நியாயமானமுறையில் பயன்படுத்தப்படக்கூடிய -

(அ) எவையேனும் நிதிசார் சேவைகளை எவரேனும் ஆளுக்கு அல்லது உருவகத்துக்கு வழங்குதலாகாது; அல்லது

(ஆ) தொகையான பணமுட்பட நிதிசார் சொத்துக்களை அல்லது வேறு சொத்துக்களை அல்லது வளன்களை எவரேனும் ஆளுக்கு அல்லது உருவகத்துக்குக் கைமாற்றுதலாகாது.

11. இலங்கையிலுள்ள ஆளொருவர் அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள இலங்கைப் பிரசையொருவர், சகொமகு வுடன் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஆளொருவருக்கு ஏற்றுமதிக் கடன்கள், உத்தரவாதங்கள் அல்லது காப்புறுதி வழங்குதலுட்பட சகொமகு வுடனான வியாபாரத்துக்கான பகிரங்க மற்றும் தனியார் நிதி ஆதரவை வழங்குதலாகாது.

12. இலங்கையிலுள்ள ஆளொருவர் அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள இலங்கைப் பிரசையொருவர், சகொமகு வுக்குக் கலன்களுக்கான எரிபொருளளிப்புச் சேவைகளை, வழங்கல்களை, நன்னிலைப்படுத்தற் சேவைகளை, குத்தகை கொடுத்தலை அல்லது வாடகைக்கமர்த்துதலை அல்லது கலன்களுக்கான கப்பற்றொகுதிச் சேவைகளை வழங்குதலாகாது.

13. பெயர்குறிக்கப்பட்ட ஆளொருவர் அல்லது பெயர்குறிக்கப்பட்ட ஆளொருவரின் எவரேனும் குடும்பவுறுப்பினர், இலங்கைப் பிரசையாகவுள்ள அத்தகைய ஆள்தவிர, இலங்கையின் ஆள்புலத்தினுட் பிரவேசித்தலாகாது அல்லது இடைப்போக்கில் அதனூடாகச் செல்லுதலாகாது.

14. (1) சகொமகு வின் நிதிநிறுவனமொன்று இலங்கையில் புதிய கிளைகளை, துணைநிலை நிறுவனங்களை அல்லது பிரதிநிதித்துவ அலுவலகங்களைத் திறத்தலாகாது.

(2) நிதிநிறுவனமொன்று, சகொமகு வின் ஆள்புலத்தில் பிரதிநிதித்துவ அலுவலகத்தை, துணைநிலை நிறுவனத்தை அல்லது கணக்கைத் தாபித்தலோ அல்லது பேணுதலோ ஆகாது.

(3) இலங்கை நிதிநிறுவனமொன்று, சகொமகு வின் ஏதேனும் நிதி நிறுவனத்தில் புதிய கூட்டுமுயற்சிகளைத் தாபித்தலாகாது, சொத்தாண்மை அக்கறையைக் கொள்ளுதலாகாது அல்லது அதனுடன் தொடர்புடையதான தொடர்புமுறையைத் தாபித்தலோ அல்லது பேணுதலோ ஆகாது.

15. (1) தகுதிவாய்ந்த அதிகாரி, பின்வருவோரின் வெளியேற்றத்தை இலங்கை அரசாங்கத்துக்கு விதந்துரைக்கலாம்:-

(அ) சகொமகு இராஜதந்திரிகள்;

(ஆ) சகொமகு அரசாங்கத்தின் பிரதிநிதிகள்;

(இ) அரசாங்கரீதியிலான அல்லது பிரதிநிதித்துவப் பதவி என்ற தன்மையில் செயலாற்றுகின்ற வேறு சகொமகு நாட்டினத்தவர்கள்;

(ஈ) பெயர்குறிக்கப்பட்ட ஓர் ஆளின் அல்லது பெயர்குறிக்கப்பட்ட உருவகத்தின் சார்பில் அல்லது அவரின் அல்லது அதன் பணிப்பின்பேரில் பணியாற்றுகின்ற வெளிநாட்டு நாட்டினத்தவர்கள்;

(உ) தடைவிதிப்புக்களைத் தட்டிக்கழித்தலில் அல்லது தீர்மானங்களை மீறுதலில் உதவுகின்ற ஒரு தனியாள் அல்லது உருவகம்;

(ஊ) முறையே சகொமகு வுக்கு அல்லது தனியாள் நாட்டினத்தவராகவுள்ள நாட்டுக்குத் திருப்பியனுப்பும் நோக்கத்துக்காக ஒரு சகொமகு வங்கியின் அல்லது நிதிநிறுவனத்தின் சார்பில் அல்லது அதன் பணிப்பின்பேரில் பணியாற்றுகின்ற தனியாள்:

ஆயின், ஐக்கிய நாடுகள் சபை அலுவல்களை நடாத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபைத் தலைமையலுவலகத்துக்கு அல்லது வேறு ஐக்கிய நாடுகள் சபைச் செயலிடங்களுக்கு சகொமகு அரசாங்கத்தின் பிரதிநிதிகள் இடைப்போக்கில் செல்வதனை மேலேயுள்ள வழிமுறைகள் தடைசெய்தலாகாது.

(2) தகுதிவாய்ந்த அதிகாரி, பின்வரும் சந்தர்ப்பங்களில் (1) ஆம் பந்திகளின் கீழான விதப்புரைகளைச் செய்தலாகாது:-

(அ) நீதிமுறையிலான நடைமுறையை நிறைவேற்றுவதற்காகத் தனியாளின் சமூகம் தேவையாகவுள்ளவிடத்து;

(ஆ) புறநீங்கலாக மருத்துவ, காப்பு அல்லது வேறு மனிதாபிமான நோக்கங்களுக்காகத் தனியாளின் சமூகம் தேவையாகவுள்ளவிடத்து; அல்லது

(இ) தனியாளை வெளியேற்றுதல், தீர்மானங்களின் குறிக்கோள்களுக்கு முரணாகவுள்ளதெனக் குழுவானது விடயம் விடயமாக என்ற அடிப்படையில் தீர்மானித்துள்ளவிடத்து.

16. பெயர்குறிக்கப்பட்ட உருவகங்களின் பிரதிநிதித்துவ அலுவலகங்களை மூடிவிடும்படியும், அத்தகைய உருவகங்களையும், நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் அவற்றுக்காக அல்லது அவற்றின் சார்பில் செயலாற்றுகின்ற தனியாட்களையும் அல்லது உருவகங்களையும், கூட்டுமுயற்சிகளில் அல்லது வேறெவையேனும் தொழில் ஒழுங்கேற்பாடுகளில் பங்குபற்றுவதனைத் தடைசெய்யும்படியும், தகுதிவாய்ந்த அதிகாரி இலங்கை அரசாங்கத்துக்கு விதந்துரைத்தல் வேண்டும்.

17. தகுதிவாய்ந்த அதிகாரி, சகொமகு இராஜதந்திர ஆளணியினர் சகொமகு வின் தடைசெய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்காக அல்லது செயற்பாடுகளுக்காக, அல்லது தடைவிதிப்புகளைத் தட்டிக்கழிப்பதற்காகப் பங்களிப்பதனை அல்லது அரசிறையைத் தோற்றுவிப்பதனைத் தடுக்கும்வகையில் அத்தகைய தனியாட்களின்மீது அதிகரித்த விழிப்பைப் பிரயோகித்தல் வேண்டும்.

18. நிதிநிறுவனமொன்று, கீழே குறித்துரைக்கப்பட்ட ஆளொருவருக்காக அல்லது உருவகமொன்றுக்காக ஒன்றுக்கு மேற்பட்ட கணக்குகளைத் திறத்தலோ அல்லது பேணுதலோ ஆகாதெனத் தகுதிவாய்ந்த அதிகாரி இலங்கை அரசாங்கத்துக்கு விதந்துரைக்கலாம்:-

(அ) ஒரு சகொமகு இராஜதந்திரத் தூதராலயம் அல்லது காவற்றூதரகம்;

(ஆ) ஒரு சகொமகு இராஜதந்திர அல்லது காவற்றூது அலுவலர்;

(இ) பந்திகள் (அ) அல்லது (ஆ) இலுள்ள ஆளொருவரினால் அல்லது உருவகத்தினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட அல்லது கட்டுப்படுத்தப்பட்ட ஆளொருவர் அல்லது உருவகம்;

(ஈ) பந்திகள் (அ) அல்லது (ஆ) இலுள்ள ஆளொருவரின் அல்லது உருவகத்தின் சார்பில் அல்லது அவரின் அல்லது அதன் பணிப்பின் பேரில் செயலாற்றுகின்ற ஆளொருவர்.

## பாகம் III

நிதிகள் முதலியவற்றை முடக்குதலும் கைப்பற்றுதலும்

19. (1) தகுதிவாய்ந்த அதிகாரி, (இவ்வொழுங்குவிதிகளில் "பெயர்குறிக்கப்பட்ட ஆள் அல்லது பெயர்குறிக்கப்பட்ட உருவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஐக்கிய நாடுகள் சபைப் பாதுகாப்புப் பேரவையினால் அல்லது குழுவினால் பெயர்குறிக்கப்பட்ட ஓராளினால் அல்லது உருவகத்தினால் அல்லது பெயர்குறிக்கப்பட்ட ஓர் ஆளுக்கு அல்லது உருவகத்துக்கு அல்லது அவரின் அல்லது அதன் நன்மைக்காக, அத்தகைய பெயர்குறிக்கப்பட்ட ஆளின் அல்லது உருவகத்தின் சார்பில் அல்லது அவரின் அல்லது அதன் பணிப்பின்கீழ் செயலாற்றுகின்ற எவரேனுமாளினால் அல்லது உருவகத்தினால், நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல், சொந்தமாக வைத்திருக்கப்பட்ட அல்லது கட்டுப்படுத்தப்பட்ட இலங்கையிலுள்ள நிதிகளை, வேறு நிதிசார் சொத்துக்களை மற்றும் பொருளாதார வளன்களை உடனடியாக முடக்குதல் வேண்டும்.

(2) தகுதிவாய்ந்த அதிகாரி, இவ்வொழுங்குவிதிகளின் பாகம் II இல் குறித்துரைக்கப்பட்ட தடைசெய்யப்பட்ட செயற்பாடுகளுடன் இணைந்துள்ளவையென அரசு தீர்மானிக்கின்ற வட கொரியா அரசாங்கத்தினதும் கொரிய தொழிலாளர் கட்சியினதும் உருவகங்களின் இலங்கையிலுள்ள நிதிகளையும், வேறு நிதிசார் சொத்துக்களையும் மற்றும் பொருளாதார வளன்களையும் உடனடியாக முடக்குதல் வேண்டும்.

(3) தகுதிவாய்ந்த அதிகாரி, பின்வருவனவற்றை உடனடியாக வர்த்தமானியில் வெளியிடுதல் வேண்டும்:-

(அ) ஐக்கிய நாடுகள் சபைப் பாதுகாப்புப் பேரவைத் தீர்மானம் 2087 (2013) இன் பின்னிணைப்பு I மற்றும் II இலும், தீர்மானம் 2094 (2013) இன் பின்னிணைப்பு I மற்றும் II இலும், தீர்மானம் 2270 (2016) இன் பின்னிணைப்பு I மற்றும் II இலும், அத்துடன் தீர்மானம் 2321 (2016) இன் பின்னிணைப்பு I மற்றும் II இலும் குறித்துரைக்கப்பட்ட பெயர்குறிக்கப்பட்ட ஆட்களினதும் பெயர்குறிக்கப்பட்ட உருவகங்களினதும் முதலாவது நிரல்கள்; அத்துடன்

(ஆ) அத்தகைய நிரல்களுக்கான எவையேனும் அடுத்துப்பின்னரான திருத்தங்கள் செய்யப்பட்டதன்மேல் உடனடியாக அத்தகைய திருத்தங்கள்.

(4) இரண்டாம் பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், தகுதிவாய்ந்த அதிகாரி நிதிசார் உளவறிதற் கூறினூடாக, பெயர்குறிக்கப்பட்ட இனங்களினதும் பெயர்குறிக்கப்பட்ட சொகுசு இனங்களினதும் அத்தகைய பெயர்குறிப்புகள் ஐக்கிய நாடுகள் சபைப் பாதுகாப்புப் பேரவையினால் அல்லது குழுவினால் செய்யப்பட்டதன்மேல் உடனடியாக நிதிநிறுவனங்களுக்கு அறிவித்தல் வேண்டும்.

20. தகுதிவாய்ந்த அதிகாரி, சகொமகு வின் அணு தொடர்பான, எறிகணை தொடர்பான, அல்லது பேரழிவை ஏற்படுத்தும் வேறு ஆயுதங்கள் தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அல்லது செயற்பாடுகளுக்குப் பங்களிப்பதற்கு நியாயமானமுறையில் பயன்படுத்தப்படக்கூடிய தொகையான பணமுட்பட, ஏனைய வளன்களை அல்லது வேறு நிதிசார் சொத்துக்களை அல்லது நிதிகளை உடனடியாக முடக்குதல் வேண்டும்.

21. முடக்கற் கட்டளையொன்றின் பயனானது, நிதிகளின், வேறு நிதிசார் சொத்துக்களின் மற்றும் பொருளாதார வளன்களின் அளவு, தொகை, அமைவிடம், சொத்தாண்மை, உடைமை, தனியுரிமை, சேரிடம் என்பவற்றிலான ஏதேனும் மாற்றத்தை, அல்லது துறை முகாமையுட்பட, நிதிகளைக் கையாள்வதனை இயலச்செய்யும் வேறு மாற்றத்தை விளைவிக்கக்கூடிய ஏதேனும் வழியில் அவற்றின் ஏதேனும் அசைவை, கைமாற்றத்தை, மாற்றத்தை, பயன்பாட்டை அல்லது கையாளுகையைத் தடைசெய்தலாகவிருத்தல் வேண்டும்:

ஆயின், அத்தகைய தடையானது, வரவுவைக்கப்பட்ட நிதிகளும் முடக்கப்பட்டனவாகவிருக்கும்வரை, அத்தகைய கணக்கின்மீது வருமதியான வட்டி அல்லது வேறு ஈட்டுகைகள், அல்லது கணக்கானது மூன்றாந்திறத்தவரொருவரினால் கணக்குக்குக் கைமாற்றப்பட்ட நிதிகளின் முடக்கப்பட்ட கணக்காக வருமுன்னர் செய்துமுடிக்கப்பட்ட அல்லது எழுந்த ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் அல்லது கடப்பாடுகள் என்பவற்றின்கீழ் வருமதியான கொடுப்பனவுகள் என்பன முடக்கற் கணக்கொன்றுக்கு வரவுவைக்கப்படுவதற்கு ஏற்புடையதாதலாகாது.

22. (1) தகுதிவாய்ந்த அதிகாரியினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மேல், மேல் நீதிமன்றம், பின்வருமாறுள்ளவிடத்து, முடக்கப்பட்ட நிதிகளை, வேறு நிதிசார் சொத்துக்களை மற்றும் பொருளாதார வளன்களைத் தேடிக் கைப்பற்றுவதற்குத் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு அதிகாரமளிக்கின்ற கட்டளையொன்றை ஆக்கலாம்:-

(அ) நிதிகளை, வேறு நிதிசார் சொத்துக்களை மற்றும் பொருளாதார வளன்களைப் பேணிக்காப்பதற்கென அக்கைப்பற்றுகையானது அவசியமாகவுள்ளவிடத்து; அல்லது

(ஆ) அத்தகைய நிதிகள், வேறு நிதிசார் சொத்துக்கள் மற்றும் பொருளாதார வளன்கள் அருகிப்போகுமென்ற நியாயமான ஆபத்துள்ளவிடத்து.

(2) தகுதிவாய்ந்த அதிகாரியின் சொந்தத் தூண்டுதலின்பேரில் அல்லது அத்தகைய முடக்கப்பட்ட நிதிகளை, வேறு நிதிசார் சொத்துக்களை மற்றும் பொருளாதார வளன்களை வைத்திருப்பவரின் கோரிக்கையின்மேல் தகுதிவாய்ந்த அதிகாரி (1)ஆம் பந்தியின்கீழ் மேல்நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(3) ஒராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட கட்டளையொன்றின்கீழான தேடுகையின்போது, கட்டளை ஏற்புடையதாக்கப்பட்ட நேரத்தில் அது உள்ளமைபற்றி அறியப்பட்டிருப்பின் அது கட்டளையில் உள்ளடக்கப்பட்டிருக்கக்கூடியதான வகையினதானதொன்றென நியாயமான ஏதுக்களின்மீது அவர்கள் நம்புகின்ற நிதிகளை, வேறு நிதிசார் சொத்துக்களை மற்றும் பொருளாதார வளன்களைத் தகுதிவாய்ந்த அதிகாரி கண்டுபிடிக்குமிடத்து, தகுதிவாய்ந்த அதிகாரி, அந்நிதிகளை, வேறு நிதிசார் சொத்துக்களை மற்றும் பொருளாதார வளன்களைக் கைப்பற்றலாமென்பதுடன், கைப்பற்றுகைக்கட்டளை அத்தகைய கைப்பற்றுகைக்கு அதிகாரமளிப்பதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(4) இரண்டாம் பந்தியின்கீழ் வழங்கப்பட்ட கட்டளையொன்றின்கீழ் கைப்பற்றப்பட்ட நிதிகள், வேறு நிதிசார் சொத்துக்கள் மற்றும் பொருளாதார வளன்கள் என்பன, அந்நிதிகள், வேறு நிதிசார் சொத்துக்கள் மற்றும் பொருளாதார வளன்கள் இவ்வொழுங்குவிதிகளின்கீழ் முடக்கப்பட்டனவாகவிருக்கும் காலம்வரை மட்டுமே வைத்திருக்கப்படலாம்.

*23.* இலங்கையிலுள்ள அல்லது இலங்கைப் பிரசையாகவுள்ள அல்லது இலங்கையில் வதிபவராகவுள்ள ஓர் ஆள் அல்லது உருவகம் ஐக்கிய நாடுகள் சபைப் பாதுகாப்புப் பேரவையினால் அல்லது குழுவினால் பெயர்குறிக்கப்பட்டுள்ளார் அல்லது பெயர்குறிக்கப்பட்டுள்ளது என்ற தகவலைப் பெற்றுக்கொண்டதன்மேல், தகுதிவாய்ந்த அதிகாரி, பின்வருவனபற்றிய நிகழ்வை, பெயர்குறிப்புக்குப் பின்னர் இயன்றளவு விரைவாக அவ்வாறு பெயர்குறிக்கப்பட்ட ஆளுக்கு அல்லது உருவகத்துக்கு அறிவிப்பதற்கு நியாயமான எல்லா முயற்சிகளையும் செய்தல் வேண்டும்:-

(i) பெயர்குறிப்பும் அதன் எதிர்த்தாக்கங்களும்;

(ii) மீளாய்வு நடவடிக்கைமுறையும் நிரலிலிருந்து அகற்றும் நடைமுறைபற்றிய தகவலும்;

(iii) பெயர்குறிப்புக்கான காரணங்கள் சம்பந்தமாகப் பகிரங்கமான முறையில் வெளியிடப்படத்தக்க தகவல்.

*24.* இருபத்திமூன்றாம் ஒழுங்குவிதியிற் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனுமாள் அல்லது உருவகம், பெயர்குறிப்பு குழுவினால் நிரலிலிருந்து அகற்றப்படுதலை நாடுவதிலான உதவிக்காகத் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு விண்ணப்பிக்கலாம். தகுதிவாய்ந்த அதிகாரி கோரிக்கையைக் குழுவுக்கு அனுப்பிவைத்தல் வேண்டுமென்பதுடன், ஐக்கிய நாடுகள் சபைப் பாதுகாப்புப் பேரவைத் தீர்மானம் 1718 (2006) என்பதன் மற்றும் மேற்கூறப்பட்ட அடுத்துப்பின்னரான தீர்மானங்கள் என்பவற்றின் நியதிகளின்படி பெயர்குறிக்கப்பட்ட ஆட்களை நிரலிலிருந்து அகற்றுதல் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபைப் பாதுகாப்புப் பேரவைத் தீர்மானங்களில் தரப்பட்டுள்ள நியமங்களையும் நடவடிக்கைமுறைகளையும் ஒத்திருக்கின்றவொரு முறையில் அதன்மீது செயலாற்றுதலும் வேண்டும்.

*25.* *(1)* தகுதிவாய்ந்த அதிகாரி அவ்வாறு செய்வதற்கான அவரது உட்கருத்துப்பற்றிக் குழுவுக்கு அறிவித்தல் வழங்கியபின்னரும் குழுவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகியபின்னரும், குறிப்பிட்ட நிதிகள் அளிக்கப்படலாம் அல்லது சொத்துக்கள் கிடைக்கக்கூடியனவாக்கப்படலாம் என 8ஆம், 9ஆம் அல்லது 10 ஆம் ஒழுங்குவிதிகளிலுள்ள தடையை நீக்குவதற்கான குறிப்பிட்ட அதிகாரவளிப்பை வழங்கலாம் என்பதுடன், அந்த அதிகாரவளிப்புத் தொடர்பிலான தோதான நிபந்தனைகள் பற்றியும் முடிபுசெய்யலாம்.

*(2)* அதிகாரவளிப்பானது குழுவின் தேவைப்பாடுகளுக்கு இணங்க எந்நேரத்திலும் இல்லாதொழிக்கப்படலாம் அல்லது வேறுபடுத்தப்படலாம். தகுதிவாய்ந்த அதிகாரி, ஐக்கிய நாடுகள் சபைப் பாதுகாப்புப் பேரவைத் தீர்மானங்கள் 1718 (2006) மற்றும் 2270 (2016) என்பவற்றிலும் ஐக்கிய நாடுகள் சபைப் பாதுகாப்புப் பேரவைத் தீர்மானம் 1718 (2006) மற்றும் மேற்கூறப்பட்ட அடுத்துப்பின்னரான தீர்மானங்கள் என்பவற்றைப் பின்பற்றி முடக்கப்பட்ட நிதிகளுக்கான அணுக்கம் தொடர்பாக வேறெவையேனும் ஐக்கிய நாடுகள் சபைப் பாதுகாப்புப் பேரவைத் தீர்மானங்களிலும் தரப்பட்டுள்ள நியமங்களுக்கும் நடவடிக்கைமுறைகளுக்கும் இணங்கச் செயலாற்றுதல் வேண்டும்.

*26.* *(1)* எந்த ஆள் அல்லது உருவகம், அவர் அல்லது அது பெயர்குறிக்கப்பட்ட ஆள் அல்லது உருவகம் அல்லவென உரிமைகோருகின்றாரோ அல்லது உரிமைகோருகின்றதோ அந்த ஆள் அல்லது உருவகம், குழுவின் நிரல்களில் எந்த ஆளின் அல்லது உருவகத்தின் பெயர் காணப்படுகின்றதோ அவர் அல்லது அது அந்த ஆள் அல்லது உருவகம் அல்லவெனக் கூறுகின்ற சான்றிதழொன்றை வழங்கும்படி கோரி, தகுதிவாய்ந்த அதிகாரிக்கு விண்ணப்பிக்கலாம். தகுதிவாய்ந்த அதிகாரி, அது தொடர்பில் தோதானவாறான அத்தகைய விசாரணைகளைச் செய்வதன்மேல், விண்ணப்பகாரர் ஒரு பெயர்குறிக்கப்பட்ட ஆள் அல்லது உருவகம் அல்லவென நிலைநாட்டப்படின், விண்ணப்பகாரருக்குச் சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும்.

*(2)* தகுதிவாய்ந்த அதிகாரி, (1)ஆம் உட்பந்தியின்கீழ் சான்றிதழொன்றை வழங்க மறுப்பதற்கு முடிபுசெய்யுமிடத்து, தமது முடிபை, அதற்கான காரணங்களுடன் சேர்த்து அவர் விண்ணப்பகாரருக்கு அறிவித்தல் வேண்டும்.

*27.* இருபத்தாறாம் ஒழுங்குவிதியின்கீழ் தகுதிவாய்ந்த அதிகாரியின் முடிபினால் இன்னலுறும் எவரேனுமாள் அல்லது உருவகம், முடிபானது அத்தகைய ஆளுக்கு அல்லது உருவகத்துக்கு அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களினுள், அதன் மீளாய்வுக்காக, அத்தகைய முடிபுக்கெதிராக மேல்நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்.

*28.* *(1)* எவரேனுமாள், எவரேனும் பெயர்குறிக்கப்பட்ட ஆள் அல்லது உருவகம் தொடர்பாக ஒழுங்குவிதிகள் 8,9,10,11 மற்றும் 12 என்பவற்றின்கீழான ஏதேனும் கடப்பாட்டுடன் சேர்த்து,-

(அ) அவர் ஏலவேயுள்ள எந்த வாடிக்கையாளருடன் அல்லது வாடிக்கையாளருடன் அல்லது வேறெவரேனுமாளுடன் அல்லது உருவகத்துடன் தொழில் புரிந்துள்ளாரோ அந்த ஏலவேயுள்ள வாடிக்கையாளர், அல்லது வாடிக்கையாளர் அல்லது வேறெவரேனுமாள் அல்லது உருவகம்,அல்லது அவர் அறிந்துள்ள வேறெவரேனுமாள் அல்லது உருவகம் ஒரு பெயர்குறிக்கப்பட்ட ஆளாகவுள்ளார் அல்லது உருவகமாகவுள்ளது அல்லது ஒரு பெயர் குறிக்கப்பட்ட ஆளின் அல்லது உருவகத்தின் சார்பில் செயலாற்றுகின்ற ஆளாகவுள்ளார் அல்லது உருவகமாகவுள்ளது என அவர் அறிந்திருப்பின் அல்லது சந்தேகிப்பின், விடயத்துக்கேற்ப, தகுதிவாய்ந்த அதிகாரிக்கு அல்லது நிதிசார் உளவறிதற் கூறுக்கு அறிவித்தல் வேண்டும்;

(ஆ) பின்வருவனபற்றிய தகவலை, விடயத்துக்கேற்ப, தகுதிவாய்ந்த அதிகாரிக்கு அல்லது நிதிசார் உளவறிதற் கூறுக்கு வழங்குதல் வேண்டும்:-

(i) நிதிகளின் நிலைமை, 20ஆம், 21ஆம் ஒழுங்குவிதிகளின்கீழான முடக்கல் வழக்குகள் மற்றும் நிதிகள் தொடர்பில் எடுக்கப்பட்ட வேறு எவையேனும் வழக்குகள்;

(ii) பெயர்குறிக்கப்பட்ட ஆளுக்காக இயைபான நிறுவனத்தினால் வைத்திருக்கப்பட்ட எவையேனும் நிதிகளின், வேறு நிதிசார் சொத்துக்களின் அல்லது பொருளாதார வளங்களின் தன்மை, தொகை அல்லது அளவு அல்லது பெயர்குறிக்கப்பட்ட ஆளுக்காக நிறைவேற்றப்பட்ட அல்லது வைத்திருக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்;

(iii) ஒரு பெயர்குறிக்கப்பட்ட ஆளினாலான அல்லது அவர் சார்பிலான ஏதேனும் கொடுக்கல்வாங்கல் அல்லது எத்தனிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்;

(iv) முடக்கப்பட்ட நிதிகள், வேறு நிதிசார் சொத்துக்கள் அல்லது பொருளாதார வளன்கள் தொடர்பிலான ஏதேனும் கொடுக்கல்வாங்கல் அல்லது எத்தனிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்; அத்துடன்

(v) இவ்வொழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகுவதனை வசதிப்படுத்தும் வேறேதேனும் தகவல்;

(இ) இத்தகவலின் ஏதேனும் சரிபார்த்தலில், விடயத்துக்கேற்ப, தகுதிவாய்ந்த அதிகாரியுடன் அல்லது நிதிசார் உளவறிதற் கூறுடன் ஒத்துழைத்தல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதிக்கிணங்க வழங்கப்பட்ட அல்லது பெற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனும் தகவல், அது எந்த நோக்கங்களுக்காக வழங்கப்பட்டதோ அல்லது பெற்றுக்கொள்ளப்பட்டதோ அந்த நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படுதல் வேண்டும். இவ்வொழுங்குவிதிக்கிணங்கத் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு அல்லது நிதிசார் உளவறிதற் கூறுக்குவழங்கப்பட்ட ஏதேனும் தகவல், ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது வேறுவகையாக விதிக்கப்பட்ட ஏதேனும் மட்டுப்பாட்டின் மீறுகையாகக் கொள்ளப்படுதலாகாது.

29. (1) இவ்வொழுங்குவிதிகளின்கீழான ஒரு கடப்பாட்டைப் பின்பற்றி, 8ஆம், 9ஆம் அல்லது 10ஆம் ஒழுங்குவிதியின் கீழான முடக்கல் வழக்குக்கு அமைந்தனவாகவுள்ள, தொகையான பணமுட்பட்ட, நிதிகளை, வேறு நிதிசார் சொத்துக்களை, பொருளாதார வளன்களை, வேறு வளன்களை அல்லது வேறு நிதிசார் சொத்துக்களை அல்லது நிதிகளை வைத்திருக்கின்ற எவரேனுமாள், முடக்கல் பயனுறுத்தப்பட்ட பின்னர், எந்த ஆளின் அல்லது உருவகத்தின் நிதிகள், வேறு நிதிசார் சொத்துக்கள் அல்லது பொருளாதார வளன்கள் முடக்கப்பட்டுள்ளனவோ அந்த ஆளுக்கு அல்லது உருவகத்துக்கு, அத்தகைய முடக்கல் வழக்குப்பற்றியும் அம்முடக்கலை நீக்குவதனை நாடுவதற்குக் கிடைக்கக்கூடிய நடவடிக்கை முறைகளைப் பற்றியும் அறிவிப்பு வழங்குவதற்கு நியாயமான எல்லா முயற்சிகளையும் எடுத்தல் வேண்டும்.

(2) நிதிகளை வைத்திருக்கின்ற ஆள், நிதிசார் உளவறிதற் கூறுக்கு உடனடியாக அறிவிப்பு வழங்குதலும் வேண்டும். நிதிசார் உளவறிதற் கூறு அத்தகைய நிகழ்வைத் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(3) ஓராம் பந்தியின் கீழான அறிவிப்பு, அத்தகைய முடக்கலிலிருந்து இரண்டு வாரங்களினுள், பாதிக்கப்பட்ட ஆள் அல்லது உருவகம் சட்ட வாழுரிமைகொண்ட இடத்துக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(4) முடக்கலினால் பாதிக்கப்பட்ட ஆள் அல்லது உருவகம் இலங்கைக்கு வெளியே வாழுரிமை கொண்டிருப்பின், முடக்கல் வழக்குப்பற்றிய அறிவித்தல், பாதிக்கப்பட்ட ஆள் எந்த நாட்டில் வாழுரிமை கொண்டுள்ளாரோ அந்த நாட்டின் அரசாங்கத்துக்கு, சேர்ப்பித்தலைச் செய்யும்படியான கோரிக்கையொன்றுடன் தகுதிவாய்ந்த அதிகாரிக்கான கோரிக்கையினூடாக வழங்கப்படுதல் வேண்டும்.

30. இவ்வொழுங்குவிதிகளின் கீழான ஒரு கடப்பாட்டைப் பின்பற்றி, 8ஆம், 9ஆம் அல்லது 10 ஆம் ஒழுங்குவிதியின் கீழான முடக்கல் வழக்குக்கு அமைந்தவையாகவுள்ள தொகையான பணமுட்பட்ட நிதிகளை, வேறு நிதிசார் சொத்துக்களை,பொருளாதாரவளன்களை, வேறு வளன்களை அல்லது வேறு நிதிசார் சொத்துக்களை அல்லது நிதிகளை வைத்திருக்கின்ற எவரேனுமாள், முடக்கல் வழக்குக்கு முன்னர் எந்நேரத்திலேனும், பெயர்குறிக்கப்பட்ட ஆளுக்கு அல்லது உருவகத்துக்கு, அவரது அல்லது அதன் நிதிகள், வேறு நிதிசார் சொத்துக்கள் அல்லது பொருளாதார வளன்கள் முடக்கப்படவுள்ளன அல்லது சொத்துக்கள் கிடைக்கக்கூடியனவாக்கப்படமாட்டாது என்ற அறிவித்தலை வழங்குவதற்குத் தடைசெய்யப்படுதலும் வேண்டும்.

*31.* தகுதிவாய்ந்த அதிகாரி, இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கிணங்க, பின்வருவனவற்றை அனுமதிப்பதற்கு, சகொமகு வின் அணுதொடர்பான, எறிகணை தொடர்பான அல்லது பேரழிவை ஏற்படுத்துகின்ற வேறு ஆயுதங்கள் தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அல்லது செயற்பாடுகளுக்கு நிதியளிப்பதனைத் தடுப்பதற்கெனத் தோதானவையென அவர் கருதுகின்றவாறான அத்தகைய நிபந்தனைகளின் கீழ் குறிப்பிட்ட ஓர் அதிகாரவளிப்பை வழங்கலாம்:-

(அ) குறிப்பாக உணவுப்பொருட்கள், மருந்துகள், குடும்ப வதிவிடத்துக்கான வாடகை அல்லது ஈடு மற்றும் அக்குடும்பவுறுப்பினர்களின் மருத்துவச் சிகிச்சை சம்பந்தமான கட்டணங்கள் அத்துடன் விதிப்பனவுகள் என்பவற்றுக்கான கொடுப்பனவுகளுட்பட, 19 ஆம் ஒழுங்குவிதியின் 2 ஆம், 3 ஆம் பந்திகளில் உள்ளடக்கப்பட்ட இயற்கை ஆளொருவரின் அல்லது அவரது குடும்பவுறுப்பினரொருவரின் அத்தியாவசியமான மனிதத் தேவைகளுக்காக முடக்கப்பட்ட நிதிகளைப் பயன்படுத்துதல் அல்லது வேறு சொத்துக்களை வழங்குதல்.

(ஆ) பின்வரும் நோக்கங்களுக்காக முடக்கப்பட்ட கணக்குகளிலிருந்தான கொடுப்பனவுகள் அல்லது வேறு சொத்துக்களை வழங்குதல்:-

(i) வரிகள், கட்டாயக் காப்புறுதிக் கட்டுப்பணங்கள் மற்றும் வாயு, நீர் மின்சாரம் அத்துடன் தொலைத்தொடர்புகள் போன்ற பொதுப்பயன்பாட்டுச் சேவைகள் என்பவற்றின் கொடுப்பனவு

(ii) கணக்குகளைப் பேணுவதற்காக ஒரு நிதிநிறுவனத்துக்கு வருமதியான விதிப்பனவுகளின் கொடுப்பனவு

(iii) சட்டச் சேவைகளை வழங்குதலுடன் இணைந்த செலவுகளின், அல்லது முடக்கப்பட்டநிதிகளை அல்லது வேறு நிதிசார் சொத்துக்களை அல்லது பொருளாதார வளன்களை வழக்கமுறையாக வைத்திருப்பதற்கான அல்லது பேணுவதற்கான கட்டணங்களின் அல்லது சேவை விதிப்பனவுகளின் கொடுப்பனவு.

*32.* (1) கப்பற்றுறைகளும் விமானநிலையங்களும் உட்பட இலங்கை ஆள்புலத்திலுள்ள சகொமகுவுக்குச் செல்லும் அல்லது அதிலிருந்துவரும் ஒரு கலத்தின் அல்லது வானூர்தியின் கப்பற்சரக்கு, 4ஆம் அல்லது 5ஆம் ஒழுங்குவிதிக்கு மீறுதலாக ஏதேனும் பெயர்குறிக்கப்பட்ட இனத்தை அல்லது ஏதேனும் பெயர்குறிக்கப்பட்ட சொகுசு இனத்தைக் கொண்டுள்ளதென நம்புவதற்கு நியாயமான ஏதுக்களை வழங்குகின்ற தகவல் உள்ளவிடத்து, தகுதிவாய்ந்த அதிகாரி, அத்தகைய கலத்தை அல்லது வானூர்தியைச் சோதனையிடுவதற்காக அத்தகைய தகவலை இயைபான சட்ட வலுவுறுத்தல் அதிகாரிகளுக்கு ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

(2) ஏதேனும் கலன் (1) ஆம் பந்தியின் கீழான சோதனையை அனுமதிப்பதற்கு மறுத்துள்ளவிடத்து, சோதனை நோக்கத்துக் காக, அல்லது ஓர் அவசரநிலைமையின் விடயத்தில் அல்லது தோற்றுமூலத் துறைமுகத்துக்குத் திரும்பிச்செல்லும் விடயத்தில் உட்பிரவேசம் தேவைப்பட்டாலொழிய, அத்தகைய கலன் ஏதேனும் இலங்கைத் துறைமுகத்தினுட் பிரவேசித்தல் தடைசெய்யப்படுதல் வேண்டும்.

(3) சகொமகு வைத் தோற்றுமூலமாகக்கொண்ட அல்லது சகொமகுவைச் சேரிடமாகக்கொண்ட, அல்லது சகொமகு வினால் அல்லது அதன் நாட்டினத்தவர்களினால், அல்லது அவர்களின் சார்பில் அல்லது அவர்களின் பணிப்பின் பேரில் செயலாற்றுகின்ற தனியாட்களினால் அல்லது உருவகங்களினால், அல்லது அவர்களினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட அல்லது கட்டுப்படுத்தப்பட்ட உருவகங்களினால் அல்லது பெயர்குறிக்கப்பட்ட தனியாட்களினால் அல்லது உருவகங்களினால் கலன்களுக்கான எரிபொருளளிக்கப்பட்டுள்ள அல்லது வசதிப்படுத்தப்பட்டுள்ள, அல்லது சகொமகு கொடியுரிமைகொண்ட வானூர்தியில் இடம்பெயர்க்கப்படுகின்ற, விமானநிலையங்கள் உட்பட இலங்கையினுள்ளான அல்லது இலங்கையினூடாக இடைப்போக்கிலுள்ள எல்லாக் கப்பற்சரக்குகளையும் தகுதிவாய்ந்த அதிகாரி இயைபான சட்ட வலுவுறுத்தல் அதிகாரிகளுக்குச் சோதனைக்காக ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

(4) பெயர்குறிக்கப்பட்ட இனம் அல்லது பெயர்குறிக்கப்பட்ட சொகுசு இனம் எதுவும், சரக்குக் கைமாற்றம் மனிதாபிமான நோக்கங்களுக்காக இருக்கும்போது அதன் தாக்கத்தை மிகக்குறைவாக்குகின்றவொரு முறையில் அது கைமாற்றப்படாதிருப்பதனை உறுதிப்படுத்துவதற்கு, எல்லா சகொமகு கொடியுரிமைகொண்ட வானூர்திகளும் இலங்கையில் தரையிறங்கும்போது அல்லது இலங்கையிலிருந்து புறப்படும்போது தகுதிவாய்ந்த அதிகாரி அவற்றைச் சோதனைக்காக இயைபான சட்ட வலுவுறுத்தல் அதிகாரிகளுக்கு ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

*33.* முப்பத்திரெண்டாம் ஒழுங்குவிதியில் குறிப்பீடுசெய்யப்பட்ட அத்தகைய கப்பற்சரக்கையும், வானூர்திகளையும், கலன்களையும் சோதனையிடுவது அத்தகைய சட்டவலுவுறுத்தல் அதிகாரியின் கடமையாதல் வேண்டும்.

*34. (1) ஒழுங்குவிதிகள் 4,5,6,7,8,9,10,11 மற்றும் 12 என்பவற்றின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள், இவ்வொழுங்குவிதிகளின் கீழானவொரு தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் இரண்டாண்டுகளுக்குக் குறையாததும் ஐந்தாண்டுகளைவிஞ்சாததுமான காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்துக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.*

*(2) இவ்வொழுங்குவிதிகளின் 28 ஆம் அல்லது 29 ஆம் ஒழுங்குவிதியில் தரப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனுமாள் இவ்வொழுங்குவிதிகளின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஓராண்டை விஞ்சாத காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்துக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.*

*35. (1) அமைச்சர், காலத்துக்குக்காலம், பாதுகாப்பு என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் கலந்தாலோசனையுடனும் தகுதிவாய்ந்த அதிகாரியின் விதப்புரையின் மீதும், பின்வருவோரின் பெயர்குறித்தலைக் குழுவுக்கு முன்மொழியலாம்:-*

*(அ) எவரேனும் பெயர்குறிக்கப்பட்ட ஆளுடன் அல்லது உருவகத்துடன் எந்த இயற்கை ஆள் இணைந்துள்ளாரென நம்புவதற்குத் தகுதிவாய்ந்த அதிகாரி நியாயமான ஏதுக்களைக் கொண்டுள்ளாரோ அந்த எவரேனும் இயற்கை ஆள்;*

*(ஆ) எவரேனும் பெயர்குறிக்கப்பட்ட ஆளுடன் அல்லது உருவகத்துடன் எந்தச்சட்ட ஆள் அல்லது உருவகம் இணைந்துள்ளாரென அல்லது இணைந்துள்ளதென நம்புவதற்குத் தகுதிவாய்ந்த அதிகாரி நியாயமான ஏதுக்களைக்கொண்டுள்ளாரோ அந்த எவரேனும் சட்ட ஆள் அல்லது உருவகம்;*

*(இ) மேலே (அ) அல்லது (ஆ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இயற்கை அல்லது சட்ட ஆட்களினால் அல்லது உருவகங்களினால் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட அல்லது கட்டுப்படுத்தப்பட்ட எவரேனும் சட்ட ஆள் அல்லது உருவகம்;*

*(ஈ) மேலே உட்பந்தி (அ) அல்லது (ஆ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இயற்கை அல்லது சட்ட ஆட்களின் அல்லது உருவகங்களின் சார்பில், அல்லது அவர்களின் அல்லது அவற்றின் பணிப்பின் மீது செயலாற்றுகின்ற எவரேனும் இயற்கை அல்லது சட்ட ஆள் அல்லது உருவகம்; அத்துடன்*

*(உ) தடைசெய்யப்பட்ட செயற்பாடுகளுடன் இணைந்துள்ளதெனத் தகுதிவாய்ந்த அதிகாரி தீர்மானிக்கின்ற சகொமகு அரசாங்கத்தினதும் கொரிய தொழிலாளர் கட்சியினதும் ஏதேனும் உருவகம்.*

*(2) ஓராம் பந்தியின் கீழான பெயர்குறித்தலுக்கான முன்மொழிவொன்று, சம்பந்தப்பட்ட ஆட்கள் மற்றும் உருவகங்களுக்கெதிராக முடிவுறாத குற்றவியற் புலனாய்வொன்று அல்லது வழக்குநடவடிக்கைகள் உள்ளமையைப் பொருட்படுத்தாது, சம்பந்தப்பட்ட அத்தகைய ஆட்களும் உருவகங்களும் தொடர்பில் ஏதேனும் இயைபான மூலத்திலிருந்தான திட்டவட்டமான தகவலின் அல்லது விடயப்பொருளின் அடிப்படையிலானதாதல் வேண்டும்.*

*(3) ஓராம் பந்தியின் கீழ் பெயர்குறிக்கப்படுவதற்கு முன்மொழியப்படுகின்ற இயற்கை அல்லது சட்ட ஆட்களின் அல்லது உருவகங்களின் பெயர்கள், அத்தகைய இயற்கை அல்லது சட்ட ஆட்களின் அல்லது உருவகங்களின் பயனுள்ள மற்றும் செம்மையான அடையாளங்காணுதலை அனுமதிப்பதற்குப் போதிய விபரங்கள் இணைக்கப்பட்டனவாக இருப்பதனை உறுதிப்படுத்துவதற்குத் தகுதிவாய்ந்த அதிகாரி நியாயமான எல்லா நடபடிகளையும் எடுத்தல் வேண்டும்.*

*(4) தகுதிவாய்ந்த அதிகாரி, அமைச்சரினால் செய்யப்பட்ட ஏதேனும் முன்மொழிவின் விளைவாகக் குழுவினால் பெயர்குறிக்கப்பட்டவையும், பெயர்குறிக்கப்பட்ட ஆட்கள் அல்லது உருவகங்கள் பற்றிய நிரல்களில் வெளியிடப்பட்டவையுமான பெயர்கள், பெயர்குறிக்கப்பட்ட ஆட்கள் அல்லது உருவகங்கள் பற்றிய நிரல்களில் அத்தகைய பெயர்களை வைத்திருப்பதற்கான அல்லது அந்நிரல்களிலிருந்து அகற்றுவதற்கான ஏதுக்கள் உள்ளனவென்பதை உறுதிப்படுத்துவதற்கென அல்லது அத்தகைய பெயர்களுடன் சம்பந்தப்படட்ட தகவலை நாளதுவரையாக்குவதற்கென, கிரமமான காலஇடைவெளிகளிலும் மற்றும் ஒவ்வோராண்டும் ஆகக்குறைந்தது ஒருதடவையேனும் மீளாயப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.*

*(5) பெயர்குறிக்கப்பட்ட ஆட்கள் அல்லது உருவகங்கள் பற்றிய நிரல்களில் ஏதேனும் பெயரை வைத்திருத்தல் மேற்கொண்டு அவசியமானதல்லதென (4) ஆம் பந்தியின் கீழான பெயர்களை மீளாய்வதன்மேல் வெளிக்காட்டப்படுமிடத்து, அமைச்சர், அத்தகைய நிரல்களிலிருந்து அத்தகைய பெயரை அகற்றுதல் பற்றிக் குழுவுக்கு முன்மொழிதல் வேண்டும்.*

(6) பெயர்குறிக்கப்பட்ட ஆட்கள் அல்லது உருவகங்கள் பற்றிய நிரல்களில் உள்ளடக்கப்பட்ட எவரேனும் பெயர்குறிக்கப்பட்ட ஆள்தொடர்பான ஏதேனும் தகவலை நாளதுவரையாக்குவதற்கான தேவை உள்ளவிடத்து, அமைச்சர், அத்தகைய தகவலைக் குழுவுக்கு அறிவித்தல் வேண்டும்.

அமைச்சர் -

(அ) (1) ஆம் பந்தியின் கீழ் பெயர்குறிக்கப்படவேண்டிய பெயரொன்றை முன்மொழியுமிடத்து;

(ஆ) பெயர்குறிக்கப்பட்ட ஆட்களின் அல்லது உருவகங்களின் நிரல்களிலிருந்து ஏதேனும் பெயரை (5)ஆம் பந்தியின் கீழ் அகற்றுவதற்கு முன்மொழியுமிடத்து;

(இ) ஏதேனும் தகவலை நாளதுவரையாக்குவதற்கென (6)ஆம் பந்தியின் கீழ் ஏதேனும் தகவலை அறிவிக்குமிடத்து,

அமைச்சர், அத்தகைய நோக்கத்துக்காக குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடவடிக்கைமுறையும் நியமப்படிவங்களையும் பின்பற்றுதல் வேண்டும்.

(7) ஆளெவரும் பெயர்குறித்தலுக்கான முன்மொழிவொன்று செய்யப்படுவதற்கு முன்னர் எந்நேரத்திலும், ஓர் ஆள் அல்லது உருவகம் முன்மொழியப்பட்டுக்கொண்டிருக்கின்றார் அல்லது முன்மொழியப்பட்டுக்கொண்டிருக்கின்றது அல்லது அத்தகைய முன்மொழிவுக்காகக் கவனத்துட்கொள்ளப்படுகின்றார் அல்லது கவனத்துட்கொள்ளப்படுகின்றது என அத்தகைய ஆளுக்கு அல்லது உருவகத்துக்கு அறிவித்தல் வழங்குதலாகாது.

36. (1) தகுதிவாய்ந்த அதிகாரி, நிதிசார் உளவறிதற் கூறு மற்றும் அமைச்சர், இவ்வொழுங்குவிதிகளின்கீழான கடப்பாடொன்றின் மீறுகைக்கு அல்லது நிகழ்தகு மீறுகைக்கு இயைபான ஏதேனும் கருமத்தை அல்லது தகவலைத் தோதான சட்ட வலுவுறுத்தல் முகவராண்மைகளுக்கும், நிறுவனங்களின் விடயத்தில், அவ்வவற்றின் மேற்பார்வை அதிகாரிகளுக்கும், நிருவாகத் தடைவிதிப்புகள் விதிக்கப்படவேண்டுமோ அல்லவாவென்பதைக் கவனத்துட்கொள்வதற்காக ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

(2) தகுதிவாய்ந்த அதிகாரி, சட்ட வலுவுறுத்தல் முகவராண்மைகளையும், நிதிசார் உளவறிதற் கூறையும், மேற்பார்வை அதிகாரிகளையும் மற்றும் வேறு தோதான முகவராண்மைகளையும் கலந்தாலோசித்தல் வேண்டுமென்பதுடன், இவ்வொழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகுதலைக் கண்காணிப்பதற்காகவும் அவற்றுடன் தொடர்புபட்ட தடைவிதிப்புகளை வலுவுறுத்துவதற்காகவும் அமுலாக்கப்படவேண்டிய ஒரு திட்டத்தை அபிவிருத்திசெய்தலும் வேண்டும்.

(3) தகுதிவாய்ந்த அதிகாரி, இவ்வொழுங்குவிதிகளின்கீழான செயல்முறைகளை அமுலாக்குவதற்காகவும் கடப்பாடுகளை வலுவுறுத்துவதற்காகவும் பணிப்புரைகளை வழங்கலாம்.

(4) தகுதிவாய்ந்த அதிகாரி, இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுப்பதில் எவரேனுமாளை அல்லது அரசாங்க நிறுவனத்தைக் கலந்தாலோசித்து, அவரிடமிருந்து அல்லது அதனிடமிருந்து தகவலைப் பரிந்துகேட்கலாம்.

37. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்துக்காக -

"படைக்கலன்களும் தொடர்புபட்ட பொருட்களும்" என்பது, பின்வருவனவற்றை உள்ளடக்கும்:-

(அ) ஆயுதங்களையும்;

(ஆ) போர்க்கலத்தொகுதியையும்;

(இ) பின்வருவன உட்பட, இராணுவ வாகனங்களையும் சாதனங்களையும்:

(i) போர்த் தாங்கிகள்;

(ii) கவசப் பாதுகாப்புடைய போர் வாகனங்கள்;

(iii) பாரிய குதழ்விட்டப் பீரங்கி முறைமைகள்;

(iv) போர் வானூர்திகள்;

(v) தாக்குதல் உலங்குவானூர்தி;

(vi) போர்க்கப்பல்கள்; அத்துடன்

(vii) எறிகணைகளும் எறிகணை முறைமைகளும்;

இவை, 1991 ஆம் ஆண்டு திசெம்பர் 6 ஆந்தேதிய ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபைத் தீர்மானம் A/RES/46/36L இன்கீழ் தாபிக்கப்பட்ட மரபுசார் படைக்கலன்கள் பற்றிய ஐக்கிய நாடுகள் சபை இடாப்புக்கு உறுப்புநாடுகளினாலான அறிக்கைகளின் நோக்கங்களுக்காக அவை கொண்டிருக்கின்ற அதே கருத்துக்களைக் கொண்டிருக்கின்றன; அத்துடன்

(ஈ) பந்திகள் (அ) முதல் (இ) வரை குறிப்பிடப்பட்ட இனங்களுக்கான உதிரிப்பாகங்களும் துணைப்பொருட்களும்; அத்துடன்

(உ) பின்வருவன உட்பட, துணைப்படைச் சாதனங்கள்:

(i) குறுந்தடிகள், கைத்தண்டுகள், கலவரமடக்கும் தடிகள், கண்ணீர்ப்புகை, மற்றும் ஒத்த உபாயங்களும் சட்ட வலுவுறுத்தல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டவொரு வகையினவான கலவரக் கட்டுப்பாட்டுக் கருவிகளும்;

(ii) மெய்க்கவசம், துப்பாக்கிக்குண்டை எதிர்க்கும் ஆடை மற்றும் தலைக்கவசங்கள்;

(iii) கைத்தளைகள், கால் விலங்குகள் மற்றும் கைதிகளைத் தடுத்து வைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட ஏனைய உபாயங்கள்;

(iv) கலவரப் பாதுகாப்புக் கேடயங்கள்;

(v) கசைகள்;

(vi) உட்பந்திகள் (i) முதல் (v) வரை குறிப்பிடப்பட்ட சாதனங்களில் அல்லது அவற்றுடன் பயன்படுத்தப்படுவதற்கு வடிவமைக்கப்பட்ட அல்லது இசைவாக்கப்பட்ட பாகங்களும் துணைப்பொருட்களும்;

“சொத்து” என்பது, எவ்வாறாயினும் கொள்ளப்பட்டவையும், நிதிகளை, பண்டங்களை அல்லது (கடல்சார்ந்த கலன்களுட்பட்ட) சேவைகள் போன்ற சேவைகளை, மற்றும் நாணயம், வங்கிக் கடன்கள், வைப்புக்கள், பயணிகளின் காசோலைகள், வங்கிக் காசோலைகள், பணக்கட்டளைகள், பங்குகள், பிணையங்கள், முறிகள், வரைவுகள் மற்றும் கடன்பத்திரங்கள் என்பனவுட்பட, அத்தகைய சொத்துக்கான உரித்தை, அல்லது அதிலான அக்கறையை, அல்லது அதனை உரிமை கோருவதற்கான உரிமையைச் சான்றுப்படுத்துகின்ற, இலத்திரனியல் அல்லது எண்ணியல் உட்பட்ட, எவ்வடிவத்திலுமான சட்ட ஆவணங்களை அல்லது சாதனங்களைப் பெற்றுக்கொள்வதற்கு இயல்திறனான முறையில் பயன்படுத்தப்படக்கூடியவையுமான உருவ அல்லது அருவ, சடப்பொருள்சார்ந்த அல்லது சடப்பொருள்சாராத அசைவுள்ள அல்லது அசைவற்ற, உள்ளபடியான அல்லது இயல்திறனான ஒவ்வொரு வகையினவையுமான நிதிகள், ஆதனங்கள், நிதிசார் வளன்கள் மற்றும் பொருளாதார வளன்கள் என்றும்; அத்துடன் அத்தகைய சொத்திலிருந்து திரளுகின்ற, அதனால் தோற்றுவிக்கப்பட்ட அல்லது அதிலிருந்து வழிவந்த ஏதேனும் வட்டி, பங்கிலாபங்கள், வருமானம் அல்லது பெறுமதி என்றும் பொருளாகும்;

“குழு” என்பது, ஐக்கிய நாடுகள் சபைப் பாதுகாப்புப் பேரவைத் தீர்மானம் 1718 (2006) என்பதைப் பின்பற்றித் தாபிக்கப்பட்ட குழு என்று பொருளாகும்;

“தொடர்பாளர் வங்கித்தொழில் உறவுமுறை” என்பது, பின்வருமிடத்து ஒரு நிதிநிறுவனத்தினால் (தொடர்பாளர்) வேறொரு நிதிநிறுவனத்துக்கு பெறுகையாளர் வங்கித்தொழிற் சேவைகள் வழங்கப்படுவதனை உட்படுத்துகின்ற ஓர் உறவுமுறை என்று பொருளாகும்:

(அ) தொடர்பாளர், ஒரு நாட்டிலுள்ள நிரந்தரத் தொழிலிடத்தில் அல்லது அதனூடாக வங்கித்தொழிலைக் கொண்டுநடாத்துகின்றவிடத்து; அத்துடன்

(ஆ) பெறுகையாளர், வேறொரு நாட்டிலுள்ள நிரந்தரத் தொழிலிடத்தில் அல்லது அதனூடாக வங்கித்தொழிலைக் கொண்டுநடாத்துகின்றவிடத்து; அத்துடன்

(இ) தொடர்பாளருக்கும் பெறுகையாளருக்கும் இடையேயான உறவுமுறை, முழுமையாக அல்லது பகுதியளவில், அந்த நிரந்தரத் தொழிலிடங்களுக்கிடையே வங்கித்தொழிற் சேவைகளை வழங்குதல் தொடர்பானதாக விருக்கின்றவிடத்து;

"சகொமகு நிதிநிறுவனம்" என்பது, நிதிநிறுவனத்துக்கான வரைவிலக்கணத்தின் (அ) முதல் (க) வரையிலான பந்திகளில் நிரற்படுத்தப்பட்ட செயற்பாடொன்றை நடாத்துகின்றவரும் அல்லது நடாத்துகின்றதும், -

(அ) சகொமகு வின் ஏதேனும் சட்டத்தின்கீழ் ஒழுங்குபடுத்தப்பட்டவரும் ஒழுங்குபடுத்தப்பட்டதும், பதிவுசெய்யப்பட்டவரும் பதிவுசெய்யப்பட்டதும்,கூட்டிணைக்கப்பட்டவரும் கூட்டிணைக்கப்பட்டதும் அல்லது உரிமமளிக்கப்பட்டவரும் உரிமமளிக்கப்பட்டதும்;

(ஆ) சகொமகு வினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்டவரும் சொந்தமாக வைத்திருக்கப்பட்டதும் அல்லது கட்டுப்படுத்தப்பட்டவரும் கட்டுப்படுத்தப்பட்டதும்; அல்லது

(இ) சகொமகு அல்லது அதன் நாட்டினத்தவர்களுள் எவரும் எந்த நிதிநிறுவனத்தில் அக்கறை கொண்டுள்ளாரோ அக்கறை கொண்டுள்ளதோ அந்த நிதிநிறுவனம் ஒன்றாக அல்லது அத்தகைய ஏதேனும் நிதிநிறுவனத்தின் துணைநிலை நிறுவனம் ஒன்றாக உள்ளதும்

ஆன ஆளொருவர் அல்லது உருவகம் என்று பொருளாகும்;

"உருவகம்" என்பது, -

(அ) ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத குழுவை,நம்பிக்கைப் பொறுப்பை, பங்காண்மையை, நிதியத்தை, அல்லது ஒழுங்கமைப்பை உள்ளடக்கும்; அத்துடன்

(ஆ) ஒரு கடல்சார் கலத்தை உள்ளடக்கும்;

"நிதிசார் உளவறிதற் கூறு" என்பது, 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிக் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட நிதிசார் உளவறிதற் கூறு என்று பொருளாகும்;

"நிதிநிறுவனம்" என்பது, ஒரு வாடிக்கையாளருக்காக அல்லது அவர்சார்பில் பின்வரும் செயற்பாடுகளுள் எவற்றையும் இலங்கையில் நடாத்துகின்ற எவரேனுமாள் அல்லது உருவகம் என்று பொருளாகும்:-

(அ) தனியார் வங்கித்தொழில் உட்பட, பொதுமக்களிடமிருந்து வைப்புக்களையும் வேறு மீளச் செலுத்தப்படற்பாலனவான நிதிகளையும் ஏற்றுக்கொள்ளுதல்;

(ஆ) பாவனையாளர் கடன்,ஈட்டுக்கடன், காரணிப்படுத்துகை (துணைநாடியோ அல்லது துணைநாடாமலோ) என்பனவுட்பட, கடன்கொடுத்தல் மற்றும் இழப்பீடு செய்தலுட்பட, வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களுக்கு நிதியளித்தல்;

(இ) பாவனையாளர் உற்பத்திப்பொருட்கள் தொடர்பான ஒழுங்கேற்பாடுகள் தொடர்பிற்றவிர நிதிக்குத்தகை;

(ஈ) நாணயத்தை அல்லது பெறுமதியைக் கைமாற்றுதல்;

(உ) கடன் மற்றும் பற்று அட்டைகள், காசோலைகள், பயணிகளின் காசோலைகள், பணக் கட்டளைகள் மற்றும் வங்கியாளர் வரைவுகள், அத்துடன் உருப்படியான வடிவத்திலல்லாத நாணயம் என்பனவுட்பட, கொடுப்பனவு வழிவகைகளை வழங்குதல் அல்லது முகாமைசெய்தல்;

(ஊ) நிதிசார் உத்தரவாதங்களை அல்லது பொறுப்புக்களை வழங்குதல்;

(எ) பின்வருவனவற்றில் வியாபாரஞ்செய்தல்:-

(i) கொண்டுவருபவர் கைமாற்றத்தகு சாதனங்கள்;

(ii) வெளிநாட்டுச் செலாவணி;

(iii) செலாவணி, வட்டிவீதம் அல்லது குறிகாட்டிச் சாதனங்கள்;

(iv) கைமாற்றத்தக்க பிணையங்கள்; அல்லது

(v) மூலாதார வியாபாரப் பொருட்களின் வியாபாரம்;

(ஏ) பிணையங்களின் வழங்குகையில் பங்குபற்றுதல் அல்லது அத்தகைய வழங்குகைகளுடன் தொடர்புபட்ட நிதிசார் சேவைகளை வழங்குதல்;

(ஐ) தனிப்பட்ட அல்லது கூட்டுவிடய முகாமை;

(ஒ) வேறாட்கள் சார்பில் உருப்படியான நாணயம், கொண்டுவருபவர் கைமாற்றத்தகு சாதனங்கள் அல்லது திரவப் பிணையங்களைப் பாதுகாப்பாக வைத்திருத்தல் அல்லது நிருவகித்தல்;

(ஓ) வேறாட்கள் சார்பில் சொத்துக்களை முதலீடு செய்தல், நிருவகித்தல் அல்லது முகாமை செய்தல்;

(ஔ) முகவர்களினாலும் தரகர்களினாலும் காப்புறுதி இடைத்தரகு உட்பட, காப்புறுதியின் ஒப்புறுதியீடு அல்லது அமர்த்துகை; அல்லது

(க) நாணயத்தை மாற்றுதல்;

"முடக்கப்பட்ட சொத்து" என்பது, இவ்வொழுங்குவிதிகளினால் விதிக்கப்பட்டவொரு தடை காரணமாகக் கையாளப்படமுடியாதவொரு சொத்து என்று பொருளாகும்;

"நிதிகள், வேறு நிதிசார் சொத்துக்கள் மற்றும் பொருளாதார வளன்கள்" என்பன, எவ்வாறாயினும் கொள்ளப்பட்டவையும், கலன்களுட்பட நிதிகளை, பண்டங்களை அல்லது சேவைகளை மற்றும் பின்வருவன உட்பட, வங்கிக் கடன்கள், பயணிகளின் காசோலைகள், வங்கிக் காசோலைகள், பணக் கட்டளைகள், பங்குகள், பிணையங்கள், முறிகள், வரைவுகள் மற்றும் கடன்பத்திரங்கள் என்பனவுட்பட ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப்படாமல், அத்தகைய சொத்துக்களுக்கான உரித்தை அல்லது அவற்றிலான அக்கறையைச் சான்றுப்படுத்துகின்ற, இலத்திரனியல் அல்லது எண்ணியலுட்பட்ட, எவ்வடிவத்திலுமான சட்ட ஆவணங்களை அல்லது சாதனங்களைப் பெற்றுக்கொள்வதற்கு இயல்திறனான முறையில் பயன்படுத்தப்படக்கூடியவையுமான உருவ அல்லது அருவ, அசைவுள்ள அல்லது அசைவற்ற, உள்ளபடியான அல்லது இயல்திறனான ஒவ்வொரு வகையினவையுமான சொத்துக்களை உள்ளடக்குதல் வேண்டும்:-

(i) அத்தகைய நிதிகள், சொத்துக்கள் அல்லது பொருளாதார வளன்களிலிருந்து திரளுகின்ற அல்லது அவற்றினால் தோற்றுவிக்கப்பட்ட எல்லா வட்டியும், பங்கிலாபங்களும் அல்லது வேறு வருமானமும் அல்லது பெறுமதியும்; அத்துடன்

(ii) நேரடியாகவல்லாமல் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட நிதிகள், சொத்துக்கள் அல்லது பொருளாதார வளன்கள்;

"மேல் நீதிமன்றம்" என்பது, அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட, கொழும்பில் நடைபெறும் மேல்மாகாணத்துக்கான மேல் நீதிமன்றம் என்று பொருளாகும்;

"நிறுவனம்" என்பது, 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிக் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்;

"அக்கறை" என்பது, ஒருநிதிநிறுவனத்தின் கட்டுப்பாட்டை அல்லது சொத்தாண்மையை (நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல்) கொண்டுள்ளமை என்று பொருளாகும்;

"அமைச்சர்" என்பது, வெளிநாட்டலுவல்கள் என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சர் என்று பொருளாகும்;

"ஆள்" என்பது, (2 ஆம் அத்தியாயமான) பொருள்கோடற் கட்டளைச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்கள்" என்பது, பின்வரும் இனங்கள், பொருட்கள், சாதனங்கள், பண்டங்கள் அல்லது தொழில்நுட்பவியல் என்று பொருளாகும்:-

(அ) பின்வரும் ஆவணங்களில் நிரற்படுத்தப்பட்டவை:

(i) S/2006/814
(ii) S/2006/815
(iii) S/2006/853
(iv) S/2006/853/CORR.1
(v) S/2009/205
(vi) S/2013/136
(vii) INFCIRC/254/Rev.9/பாகம் 1அ;
(viii) INFCIRC/254/Rev.7/பாகம் 2அ; அல்லது
(ix) ஐக்கிய நாடுகள் சபைப் பாதுகாப்புப் பேரவைத் தீர்மானம் 2321 என்பதற்கான பின்னிணைப்பு III ; அல்லது

(ஆ) சகொமகு வின் அணு தொடர்பான, எறிகணை தொடர்பான அல்லது பேரழிவை ஏற்படுத்துகின்ற ஆயுதங்கள் தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களுக்குப் பங்களிக்கக் கூடியவையும்:-

(i) ஐக்கிய நாடுகள் சபைப் பாதுகாப்புப் பேரவையினால் அல்லது அதன் குழுக்களினால் செய்யப்பட்டதும்; அத்துடன்

(ii) ஐக்கிய நாடுகள் சபைப் பாதுகாப்புப் பேரவைத் தீர்மானம் 1718 இன் பந்தி 8(அ)(ii) இன்கீழ் செய்யப்பட்டதும்; அத்துடன்

(iii) பயனில்லாதொழியாததும்,

ஆன ஒரு தீர்மானத்தின் விடயப்பொருளாகவுள்ளவையும்; அல்லது

(இ) இரட்டைப் பயன்பாட்டு மரபுமுறையான படைக்கலன்களாக உள்ளவையும், ஐக்கிய நாடுகள் சபைப் பாதுகாப்புப் பேரவைத் தீர்மானம் 2321 இன் 7 ஆம் பந்தியின்கீழ் செய்யப்பட்ட தீர்மானத்தின் விடயப்பொருளாகவுள்ளவையும்; அல்லது

(ஈ) பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்கள் தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களுக்குப் பங்களிக்கக்கூடியவையும், ஐக்கிய நாடுகள் சபைப் பாதுகாப்புப் பேரவை ஒழுங்குவிதிகளில் தடைசெய்யப்படுகின்றவையும்.

## அட்டவணை I

(ஒழுங்குவிதி 4(1)(அ))

1. படைக்கலன்கள் அல்லது தொடர்புபட்ட பொருட்கள்;

2. பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்கள்;

3. எறிகணை தொடர்பான பண்டங்கள்;

4. சகொமகு இன் அணு அல்லது எறிகணை நிகழ்ச்சித் திட்டங்களுக்கு, 2 ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஐக்கிய நாடுகள் சபைப் பாதுகாப்புப் பேரவைத் தீர்மானங்களில் தடை செய்யப்பட்ட செயற்பாடுகளுக்கு, அல்லது எவையேனும் அடுத்துப்பின்னரான தீர்மானங்களில் அல்லது சகொமகு வின் ஆயுதந்தாங்கிய படையினரின் தொழிற்பாடுசார் ஆற்றல்களுக்குப் பங்களிக்கக்கூடிய செயற்பாடுகளுக்கு, அல்லது சகொமகு வுக்குப் புறம்பான வேறோர் உறுப்புநாட்டின் தொழிற்பாடுசார் ஆற்றல்களை ஆதரிக்கின்ற அல்லது அதிகரிக்கின்ற ஏற்றுமதிகளுக்குப் பங்களிக்கக்கூடிய ஏதேனும் இனம், பொருட்கள், சாதனங்கள், பண்டங்கள் அல்லது தொழில்நுட்பவியல்;

5. 2016 திசெம்பர் 15 ஆந்தேதிய S/2016/1069 இல் நிரற்படுத்தப்பட்டவையுட்பட மரபுமுறையான படைக்கலன்கள் இரட்டைப் பயன்பாட்டு இனங்கள் (மரபுமுறையான படைக்கலன்கள் இரட்டைப் பயன்பாட்டு இனங்கள் கட்டுப்பாட்டு நிரல்).

6. இரண்டாம் ஒழுங்குவிதியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஐக்கிய நாடுகள் சபைப் பாதுகாப்புப் பேரவைத் தீர்மானங்களில் தடைசெய்யப்பட்ட வான்செலவு எரிபொருள்.

7. இரண்டாம் ஒழுங்குவிதியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஐக்கிய நாடுகள் சபைப் பாதுகாப்புப் பேரவைத் தீர்மானங்களில் தடைசெய்யப்பட்ட வேறெவையேனும் இனங்கள்.

## அட்டவணை II

(ஒழுங்குவிதி 4(1)(ஆ))

1. படைக்கலன்களும் தொடர்புபட்ட பொருட்களும்;

2. பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்கள்;

3. எறிகணை தொடர்பான பண்டங்கள்;

4. சகொமகு ஆயுதந்தாங்கிய படையினரின் தொழிற்பாடுசார் ஆற்றல்களுக்குப் பங்களிக்கக்கூடிய அல்லது சகொமகு வுக்குப் புறம்பான வேறோர் உறுப்புநாட்டின் ஆயுதந்தாங்கிய படையினரின் தொழிற்பாடுசார் ஆற்றல்களை ஆதரிக்கின்ற அல்லது அதிகரிக்கின்ற ஏற்றுமதிகளுக்குப் பங்களிக்கக்கூடிய இனங்கள், பொருட்கள், சாதனங்கள், பண்டங்கள் அல்லது தொழில்நுட்பவியல்;

5. (குறிப்பிட்ட விதிவிலக்குகளுக்கமைய) நிலக்கரி, இரும்பு, அல்லது இரும்புத்தாது;

6. தங்கம், திடனியத்தாது , வனட்டியத்தாது, செம்பு, வெள்ளி, வெண்காந்திகை, அல்லது துத்தநாகம்;

7. இரண்டாம் ஒழுங்குவிதியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஐக்கிய நாடுகள் சபைப் பாதுகாப்புப் பேரவைத் தீர்மானங்களில் தடைசெய்யப்பட்ட அரிய நிலக் கனிப்பொருட்கள்;

8. சொத்தாண்மை அல்லது கட்டுப்பாடு கைமாற்றப்படுவதனைப் பொருட்படுத்தாது, பழுதுபார்க்கப்படுவதற்கான, நன்னிலைப்படுத்தப்படுவதற்கான, மறுசீரமைக்கப்படுவதற்கான, பரீட்சிக்கப்படுவதற்கான, பின்னடைவு எந்திரவியலுக்கான, மற்றும் சந்தைப்படுத்தப்படுவதற்கான மரபுமுறையான படைக்கலன்களின் அல்லது தொடர்புபட்ட இனங்களின் ஏதேனும் கப்பலேற்றுகை;

9. 2016 திசெம்பர் 15 ஆந்தேதிய S/2016/1069 இல் நிரற்படுத்தப்பட்டவையுட்பட மரபுமுறையான படைக்கலன்கள் இரட்டைப் பயன்பாட்டு இனங்கள் (மரபுமுறையான படைக்கலன்கள் இரட்டைப் பயன்பாட்டு இனங்கள் கட்டுப்பாட்டு நிரல்).

10. சகொமகு வுக்குப் பறந்துசெல்லும்போதும் அங்கிருந்து திரும்பப் பறந்து வரும்போதும் புறநீங்கலாகப் பாவனைசெய்யப்படுவதற்காகப் பொதுமக்கள் பயணிகளாகவுள்ள வானூர்திகளுக்கான வான்செலவு எரிபொருளை விற்பனை செய்தல் அல்லது வழங்குதல் தொடர்பிற்றவிர, அவர்களின் ஆள்புலம் தோற்றுமூலமாகவிருப்பினுஞ்சரி அல்லாதாயினுஞ்சரி சகொமகு வின் ஆள்புலத்திற்கான வான்செலவு வளியெரிநெய், இரசகற்பூரவகை தாரை எரிபொருள், மண்ணெண்ணெய்வகை எரிபொருள் மற்றும் மண்ணெண்ணெய் வகை ஏவுகணை எரிபொருள் என்பனவுட்பட, வான்செலவு எரிபொருள்;

11. மேலே விவரிக்கப்பட்ட இனங்களின் வழங்குகை, உற்பத்தி, பேணுகை அல்லது பயன்பாடு தொடர்பான தொழில்நுட்பப்பயிற்சி, மதியுரை, சேவைகள் அல்லது உதவி;

12. மேலே விவரிக்கப்பட்ட இனங்களை உற்பத்திசெய்வதற்குப் பயன்படுத்தப்படவேண்டிய பொருட்கள், மென்பொருட்கள், எந்திரத்தொகுதி, தொழில்நுட்பவியல் மற்றும் கருவிகள்;

13. இரண்டாம் ஒழுங்குவிதியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஐக்கிய நாடுகள் சபைப் பாதுகாப்புப் பேரவைத் தீர்மானங்களில் தடைசெய்யப்பட்ட வேறெவையேனும் இனங்கள்.

10-630

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.